வேளியல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: A.பத்மபிரியா

நாள்: 11.03.2024

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், மற்றும் செய்யார் ஊராட்சி ஒன்றியம் வேளியநல்லூர் கிராமம் சர்வே எண்: 3/4 ல் 0.32 சென்ட் நிலத்தில் **அருணாச்சாலா நகர்** குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி தொடர்பாக. மனை எண்கள் 1 முதல் 5 வரை மனைகள் விற்பனை செய்த ஒப்புதல் அளித்தல் சார்பு.

பார்வை:

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க AVJYSRML/2024/TVM/2024/TCP திருவண்ணாமலை நாள்: 28.02.2024
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம் திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ம.வ./மா.ந.ஊ.உ.இ.எண்: 57/2024 திருவண்ணாமலை நாள்: 28.02.2024
3. அரசாணை (நிலை) எண்: 79/வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நாள்: 04.05.2017
4. அரசானை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3) துறை நாள். 9.12.2020
5. வேளியநல்லூர் ஊராட்சி மன்றத் தீர்மான எண்: 107 நாள்: 11.03.2024

உத்தரவு:

பார்வை 01-ல் காணும் திருவண்ணாமலை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதத்தில் செய்யார் ஊராட்சி ஒன்றியம் வேளியநல்லூர் கிராம சர்வே எண்: 3/4 ல் 0.32 சென்ட் நிலத்தில் **அருணாச்சாலா நகர்** குடியிருப்பு மனை எண்கள் 1 முதல் 5 வரை குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு தெரிவித்து ஆணை வரப்பெற்றுள்ளது.

அங்கீகரிகப்பட்ட மனைப்பிரிவுகள் ஒதுக்கீடு விபரம்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	0.32 ஏக்கர்
கோரிய மனைகள்	=	5
ஒதுக்கிய மனைகள்	=	5

பார்வை 02-ல் காணும் அரசாணை (நிலை) எண்: 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நு.வ.4(3))த் துறை நாள்: 04.05.2017 குறிப்பிட்டுள்ள உட்பிரிவு 09-ன்படி நகர ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து செய்யக் கருதியுள்ள மேம்பாடு குறித்து முன் அனுமதி பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

SCAN AnyScanner

பார்வை 03-ல் காணும் கடிதம் வாயிலாக செய்யார் இணைசார்-2 அலுவலகம் அவர்களிடம் செய்யார் ஊராட்சி ஒன்றியம் வேளியநல்லூர் கிராம சர்வே எண்: 3/4 ல் 0.32 சென்ட் நிலத்தில் **அருணாச்சாலா நகர்** குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி தொடர்பாக. மனை எண்கள் 1 முதல் 5 வரை புதிய மனைப்பிரிவு அமைந்துள்ள இடத்தின் மதிப்பீடு கோரப்பட்டது.

பார்வை 03-ல் காணும் கடிதத்தின் வாயிலாக செய்யார் இணைசார்-2 அலுவலகம் அவர்கள் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு அளித்துள்ளார்.

வ.எண்	சர்வே எண்	பரப்பு	தன்மை	மதிப்பீடு		குறிப்பு
				ஏக்கர்	ஹெக்டேர்	
1	சர்வே எண் 3/4 -ல் **அருணாச்சாலா நகர்** 0.32 ஏக்கர்	1296.17 சதுர மீட்டர்	Dry Maanavari Land Type-III	0.32 (13952) சதுர அடி	0.13.00 ஹெக்டேர்	பதிவு அடிப்படையில் உயர் மதிப்பீடு

எனவே செய்யார் ஊராட்சி ஒன்றியம் வேளியநல்லூர் கிராம சர்வே எண்: 3/4 ல் 0.32 சென்ட் நிலத்தில் **அருணாச்சாலா நகர்** குடியிருப்பு மனை எண்கள் 1 முதல் 5 வரை குடியிருப்பு செய்யார் இணைசார்-2 அலுவலகம் அவர்களின் கடிதத்தின் மொத்த மதிப்பீடு (ரூ.48,000/-) ஆகும்.

எனவே மனுதாரர் மேற்கண்ட இடத்திற்கு 3 சதவீதம் தொகை ரூ.1,440 /- ஆக அரசு தலைப்பில் (A/C:7391583880) இந்தியன் வங்கி கிளை செய்யார், நாள்: 11.03.2024 மற்றும் Scrutiny Fee Rs. 1000x5=5000/- ஊராட்சி நிதி கணக்கு எண்-1 நாள்: 11.03.2024-ல் செலுத்தி அதற்கான இரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை 4-ல் குறிப்பிட்டுள்ள செய்யார் ஊராட்சி ஒன்றியம், வேளியநல்லூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்:107 நாள்: 11.03.2024-ன்படி **அருணாச்சாலா நகர்** மனைவிரிவில் உள்ள கீழ்க்கண்ட மனைகளை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விற்பனை செய்யப்படாத மனை எண்கள் விவரம்:
1-5
(மொத்த பரப்பு: 0.32 ஏக்கர்)

A. Padmapriya.

ஊராட்சி மன்றத்தலைவர்
வேளியநல்லூர் ஊராட்சி
செய்யார் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:
திரு. M.சங்கீதா,
நெ.14/29, கோபால் தெரு,
செய்யார் டவுன்,
செய்யார் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

நகல் பணிவு. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருவண்ணாமலை
நகல் பணிவு. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை
நகல். செய்யார் இணைசார்-2 சார்பதிவாளர் அலுவலகம்
நகல். வட்டார வளர்ச்சி அலுவலர், செய்யார்.
நகல். ஊராட்சி செயலர், வேளியநல்லூர்.

SCAN AnyScanner